கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈළනාඩු




Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 24.07.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 199 பக்கங்கள் : 08

## மழை அங்கியைப் போன்ற உடையுடன் செம்மணியில் சிறுவனின் என்புக்கூடு!



யாழ்ப்பாணம், ஜூலை. 24

செம்மணி மனிதப் புதைகுழியில், தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மழை அங்கியை ஒத்த அங்கியுடன், சிறுவனின் எலும்புக்கூடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாள்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 41 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்ட அழ்வுப் பணிகளின்போது, 7 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

07

# 1983 கலவரத்துக்கு அனுமதித்த தலைவர்களே செம்மணி மனித புதைகுழிக்கு முழு பொறுப்பு!

### சபையில் தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை. 24

**யாழ்ப்பாணம் சித்துப்பாத்தி செம்மணி மனித புதைகுழியில் இருந்து மீட்கப்படும் எலும்புக் கூடுகளுக்கு 1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்துக்கு உதவி ஒத்தாசை மற்றும் அனுமதியளித்த அரச தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியே இனக்கலவரத்தை தோற்றுவித்து 30 ஆண்டுகால யுத்தத்தை உருவாக்கியது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ன தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற கறுப்பு ஜூலை கலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டின் கறுப்பு பதிவாகவே ஜூலை 23ஆம் காணப்படுகிறது. செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து தற்போது மீட்கப்படும் ஒவ்வொரு

07

## கோட்டாபயவின் மேன்முறையீட்டு மனு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை. 24

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட மேனமுறையீட்டு மனுவை,

07

## நீதித்துறையில் அநுர அரசின் தலையீட்டை தோற்கடிப்போம்!

### எதிரணிகள் கொழும்பில் கூடி சூளுரை





கொழும்பு, ஜூலை. 24

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், நீதித்துறையில் தலையீடு செய்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை இணைந்து தோற்கடிப்போம்” என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார்.

07

## பாராளுமன்றில் நேற்று கறுப்பு ஜூலை நினைவு

### தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு



கொழும்பு, ஜூலை. 24

1983 ஜூலை வன்முறையின் 43ஆவது ஆண்டு நிறைவு நேற்று பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் நினைவுகூரப்பட்டது.

ஈழத் தமிழ் மக்களின் வாழ்வை அடியோடு மாற்றிப்போட்ட அந்த கோரச் சம்பவம் நடந்து

07

## கொழும்பு துறைமுக நகர் பகுதியில் சீன நாட்டவர்கள் இடையே மோதல்!

### வாகனத்திலிருந்து கைத்துப்பாக்கி மீட்பு

கொழும்பு, ஜூலை. 24

கொழும்பு துறைமுக நகர் பகுதியில் சீன நாட்டவர்களான இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின்போது காயமடைந்த சீன நாட்டவர் ஒருவர், எதிர்த் தரப்பினரால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதலில் இரு தரப்பைச் சேர்ந்த சீன நாட்டவர்களும் காயமடைந்துள்ளனர்.

07

## எதிர்பார்த்ததைவிட முன்னதாகவே எல் நினோ இலங்கையைத் தாக்கும்!

### சுற்றாடல் அமைச்சர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை. 24

உலகளாவிய காலநிலை மாற்றத்தின் தாக்கமான “எல் நினோ” காலநிலை நிகழ்வு எதிர்பார்த்ததை விட முன்னதாகவே இலங்கையில் தீவிரமடைந்து, எதிர்வரும் நவம்பர் மாத மளவில் அதன்

07

## முட்டாள் தனமாக கதைக்கவேண்டாம்!

### அர்ச்சுனாவை எச்சரித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூலை. 24

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நிலையியல் கட்டளைகள் தொடர்பில் எழுப்பிய கேள்வி குறித்து சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

07

## கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 5,523 சிறுவர் துஷ்பிரயோகங்கள்!

கொழும்பு, ஜூலை. 24

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் 5,523 சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை

07

## நீர்கொழும்பு சிறையில் மோதல் 969 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஜூலை. 24

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறை மோதல் சம்பவம் தொடர்பில் இதுவரை 200 சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் 563 கைதிகள் உட்பட மொத்தம் 969 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளது.

அத்துடன், பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 130 வீரர்களிடமும் 11 பொலிஸ் அதிகாரிகளிடமும் விசாரணைகள் நடத்தப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

07

## கொழும்பில் இருந்து தலைமன்னாருக்கு புதிய ரயில் சேவை இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை. 24

கொழும்பு கோட்டைக்கும் தலைமன்னார் துறைமுகத்திற்கும் இடையே இன்று வெள்ளிக்கிழமை முதல் புதிய ரயில் சேவையை இலங்கை ரயில்வே திணைக்களம் ஆரம் பிக்கவுள்ளது.

இதன்படி, இலக்கம் 5003 கொண்ட ரயில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயர்தரப் பரீட்சையை 2 மாதங்களுக்கு ஒத்திவைக்கக் கோரிய மனு தள்ளுபடி!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

கொழும்பு, ஜூலை. 24

எதிர்வரும் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கக் கோரி மாணவர்கள் குழுவொன்று தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ரொஹாந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 9 மாணவர்கள் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர். கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளின்படி, கல்வியாண்டில் கட்டாயமாக நிறைவேற்றப்பட வேண்டிய பாடசாலை நாள்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதால் பரீட்சையை இரண்டு மாதங்கள் ஒத்திவைக்குமாறு அவர்கள் கோரியிருந்தனர்.

எரிபொருள் நெருக்கடி காலத்தில் புதன்கிழமைகள் அரச விடுமுறையாக அறிவிக்கப்பட்டமை மற்றும் "டித்வா" சூறாவளி காரணமாக பாடசாலை கல்வி பாதிக்கப்பட்டதாக மனுதாரர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டது.

இதற்கு பதிலளித்த அரசுத் தரப்பு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன, இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்கு சுமார் 3 இலட்சத்து 78 ஆயிரம் மாணவர்கள் பதிவு செய்துள்ள நிலையில், வெறும் 9 மாணவர்கள் மட்டுமே பரீட்சையை ஒத்திவைக்கக் கோரி நீதிமன்றத்தை நாடியுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

மேலும், பாடசாலை ஊடாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு குறைந்த பட்சம் 80 வீத வருகைப் பதிவு அவசியம் எனவும், மனுதாரர்களில் ஒருவரின் வருகைப் பதிவு 7.2 வீதம் மட்டுமே இருந்ததாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சையை ஒத்திவைத்தால் பல்கலைக்கழக அனுமதி உள்ளிட்ட அடுத்த கட்ட கல்வி நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்படும் என்றும் அரசுத் தரப்பு வலியுறுத்தியது.

இரு தரப்பினரின் வாதங்களையும் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், மனுவை விசாரணைக்கு ஏற்க அனுமதி மறுத்ததுடன், அதைத் தள்ளுபடி செய்துள்ளது. இதன் மூலம் உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறுவதற்கான சட்டத் தடைகள் நீங்கி உள்ளன. (அ)

# இந்திய, பங்களாதேஷ் அமைச்சர்களை சந்தித்து பேச்சு நடத்திய விஜித ஹேரத்



மணிலா, ஜூலை. 24

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறும் 33ஆவது ஆசியான் பிராந்திய மன்ற அமைச்சர்கள் மாநாட்டின் ஒருபகுதியாக, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் கலிலுர் ரஹ்மான் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக சமூக ஊடகமான எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர், இலங்கை மற்றும் பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்துள்ளார். (அ)

# டெங்கு சோதனையின் போது வீடொன்றில் துப்பாக்கி மீட்பு

கொழும்பு, ஜூலை. 24

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு அமைவாக, பெலவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட வளாகப் பரிசோதனையொன்றின்போது வீடொன்றிலிருந்து துப்பாக்கியொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால், இராணுவம், விமானப் படை, இலங்கை பொலிஸ் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பெருமளவிலான நாய்கள் வளர்க்கப்படும், மிகவும் அசுத்தமான நிலையில் காணப்பட்ட வீடொன்றைச் சோதனையிட்டபோதே, அங்கிருந்து உயிருள்ள டெங்கு நுளம்புக் குடம்பிகள் மற்றும் குறித்த துப்பாக்கியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, பொலிஸாரால் குறித்த துப்பாக்கி பொறுப்பேற்கப்பட்டதுடன், வீட்டின் உரிமையாளரான பெண்ணும் கைது செய்யப்பட்டார். (அ)

# யாழில் 60 பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸின் சாரதி திடீரென உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ்ப்பாணத்தில் பஸ் செலுத்தியவாறே சாரதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை சேர்ந்த முருகேசு ரமேஷ் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் குறித்த தனியார் பஸ் புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்தது. அந்த பஸ்ஸில் 60 பயணிகள் இருந்துள்ளனர்.

பஸ் வேலணை - அராலி சந்தியால் பயணித்துக் கொண்டிருந்தபோது சாரதி ஆசனத்தில் சாய்ந்தபடியே மயக்கமுற்றுள்ளார்.

பஸ் மெதுவாக வீதியை விட்டு ஓரமாகச் செல்வதை நடத்துநர் அவதானித்து விட்டு சாரதியைப் பார்த்தவேளை அவர் மயக்கமுற்ற விடயம் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சாதுரியமாக செயற்பட்ட நடத்துநர், பஸ்ஸை நிறுத்திவிட்டு சாரதியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

மாரடைப்பு காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ-05)

# சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன தலைவரை ஐ.நா. செயலாளர் நாயகமாக்க விரும்பும் ட்ரம்ப்!

நியூயோர்க், ஜூலை. 24

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஜியான்னி இன்ஃபான்டினோவை ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த செயலாளர் நாயகமாக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விரும்புகிறார் என்று "நியூயோர்க் போஸ்ட்" செய்தி வெளியிட்டுள்ளது.

ட்ரம்பிற்கு நெருக்கமான ஒரு வட்டாரத்தை மேற்கோள் காட்டி "போஸ்ட்" வெளியிட்ட செய்தியில் இன்ஃபான்டினோ "உலகம் முழுவதும் உள்ள அனைவராலும் மதிக்கப்படுகிறார், மேலும் மக்களை ஒன்றுபடுத்தும் சிறப்பு திறன் அவரிடம் இருப்பதை ட்ரம்ப் உணர்ந்துள்ளார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்தில் பிறந்த 56 வயதான இன்ஃபான்டினோ, இந்த ஆண்டின் உலகக் கோப்பையின்போது ட்ரம்புடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். டிசெம்பரில் ட்ரம்பிற்கு தனது சம்மேளனத்தின் முதலாவது சமாதான விருதை வழங்கியது உட்பட,



அமெரிக்கத் தலைவரை கவருவதற்கு அவர் பல முயற்சிகளை மேற்கொண்டதாக அந்த செய்தி கூறுகிறது.

தற்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டரெஸுக்கு பிறகு பதவியேற்கும் புதிய செயலாளர் நாயகம் 2027 ஜனவரி 1 முதல் தொடங்கும் ஐந்து ஆண்டு காலத்திற்குப் பணியாற்றுவார்.

ஐ.நா. சாசனத்தின் பிரிவு 97 இன் படி, பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரிலேயே பொதுச் சபையால் செயலாளர் நாயகம் நியமிக்கப்படுகிறார்.

இந்தப் பதவியைப் பெற, இன்ஃபான்டினோ முதலில் 15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையின் ஆதரவைப் பெறவேண்டும். அங்குள்ள ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் எவரும் தங்களது "வீட்டோ" அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். அதன் பிறகே அவர் பொதுச்சபையின் ஒப்புதலைப் பெற முடியும்.

முக்கிய உலகளாவிய மோதல்களைத் தீர்ப்பதில் ஐ.நா. தீவிரமான பங்கைக் வகிக்கத் தவறிவிட்டது என்று ட்ரம்ப் தொடர்ந்து விமர்சித்து வருகிறார். கடந்த ஆண்டு, அவர் அமெரிக்கா தலைமையிலான "சமாதானச் சபையை" (Board of Peace) நிறுவினார். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அமைப்பான ஹமாஸுக்கு இடையிலான அமைதி உடன்படிக்கைகள் உட்பட தனது நிர்வாகம் அமைதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த போது, ஐ.நா.விற்கு மாற்றாக ஒன்றை அவர் உருவாக்குகிறார் என்ற ஊகங்களை இது தூண்டியது. ஆனால், ட்ரம்ப் இதை மறுத்தார். (அ)

# சகல தொழிற்சாலைகளிலும் விசேட பாதுகாப்பு ஆய்வு!

கொழும்பு, ஜூலை. 24

நாட்டின் அனைத்து தொழிற்சாலைகளும் போதுமான பாதுகாப்புத் தரநிலைகளின் கீழ் இயங்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்தும் வகையில், நாடு தழுவிய விசேட பாதுகாப்பு ஆய்வொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தொழிலாளர் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகம, கட்டுவன பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்புத் தலைக்கவச உற்பத்தித் தொழிற்சாலையில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து உள்ளிட்ட தொடர்ச்சியான தொழிற்சாலை தீ விபத்துகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, முதற்கட்டமாக அனைத்து தொழிற்சாலைகளும் அவற்றின் செயற்பாட்டு தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தப்படும் என்றும், அதன் பின்னரே பாதுகாப்பு தரநிலைகள் தொடர்பான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தொழிலாளர் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

24.07.2026 வெள்ளிக்கிழமை

பராபவ வருடம், ஆடி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## அதிகாரமும் அரசியல்வாதிகளும்

அரசியல்வாதிகள் பல்வேறு சித்தாந்தங்களைப் பேசலாம். ஆனால் ஆட்சியதிகாரத்தைச் சுவைத்த பிறகு அவர்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகவே நடந்துகொள்கிறார்கள். இது கொள்கைகளை விடவும் சுயநலத்தின் அடிப்படையில் செயற்படவும் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள சாத்தியமான அனைத்தையும் செய்யவும் அவர்களைத் தூண்டுகிறது.

லத்தீன் அமெரிக்க நாடான நிக்கரகுவாவில் அமெரிக்க ஆதரவு பெற்ற சர்வாதிகாரி அனஸ்டாசியோ சோமோசாவின் ஆட்சியை 1979ஆம் ஆண்டில் புரட்சிமூலம் தூக்கியெறிந்த சாண்டினிஸ்டா இயக்கத்தின் தலைவர் "மார்க்சியவாதி" டானியல் ஓர்டேகா.

நீண்டகாலமாக ஆட்சியில் இருந்து வரும் அவர் இனிமேல் தனது நாட்டில் தேர்தல்களே நடத்தப்படமாட்டாது என்று அறிவித்திருக்கிறார். சாண்டினிஸ்டா புரட்சியின் 47வது ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் கடந்த வாரம் உரையாற்றிய ஓர்டேகா எதிர்க்கட்சிகளுக்கு எதிராக "சுவர்" ஒன்றை எழுப்ப வேண்டியிருப்பதாகக் கூறி தேர்தல்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறார்.

சோமோசாவை அகற்றியதன் மூலம் தங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிய நிக்கரகுவா மக்கள் இப்போது ஜனாதிபதி ஓர்டேகாவினதும் துணை ஜனாதிபதியான அவரது மனைவி முரில்லோவினதும் சர்வாதிகாரத்தின் கீழ் தவித்துவருகின்றனர். அவர்கள் தங்கள் வாக்குரிமையை இழக்கும் ஆபத்தை எதிர்கொள்கிறார்கள். மீண்டும் ஒரு புரட்சி நிக்கரகுவாவுக்கு தேவைப்படுகிறது.

பல வருடங்களுக்கு அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்கள் பெரும்பாலும் தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டும் என்ற வேட்கையில் மக்களின் ஜனநாயக சுதந்தரங்களைப் பறிக்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதற்கு பல உதாரணங்கள் உண்டு.

நிக்கரகுவாவில் தேர்தல்களை இல்லாமல் செய்யும் ஜனாதிபதி ஓர்டேகாவின் அறிவிப்பு குறித்து விமர்சனங்களை எழுதியிருக்கும் அரசியல் ஆய்வாளர்களில் பலரும் மார்க்சியப் பின்னணியைக் கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இலங்கையில் தற்போது ஆட்சியில் இருப்பது பற்றி குறிப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஜே.வி.பி. அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக கடந்த நூற்றாண்டில் இருபது வருட இடைவெளியில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளைச் செய்தது. ஆனால் வெற்றிபெற முடியவில்லை. இறுதியில் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு மூன்று தசாப்தங்களுக்கு பிறகு அது தேசிய மக்கள் சக்தி என்ற புதிய அவதாரத்தில் மக்களினால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறது. ஓர்டேகாவை ஜே.வி.பி.யும் பின்பற்றக்கூடும் என்று நாம் கூறவரவில்லை. நிக்கரகுவாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அரசியல் நிலக்காட்சியில் பாரிய வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆனால், நாட்டை முறையாக அபிவிருத்தி செய்வதாக இருந்தால் அரசாங்கம் ஒன்று சுமார் 15 - 20 வருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சி செய்ய வேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் தங்களிடம் கூறியதாக ஜே.வி.பி.யின் தலைவர்கள் குறிப்பாக, அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அடிக்கடி கூறுவது தவிர்க்க முடியாமல் இந்த சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியிருக்கும் அமெரிக்கா



(நேற்றைய தொடர்ச்சி)

உண்மையில், இது அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் தார்மீக வீழ்ச்சியையும், விதிகளின் அடிப்படையிலான உலக ஒழுங்கை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கு ஒரு பலத்த அடியையும் குறிக்கிறது.

விதிகளின் அடிப்படையிலான ஒழுங்கிற்கு வாஷிங்டன் காட்டும் சிறிய அளவிலான மதிப்பும் அதிகாரத்தினால் தூண்டப்பட்டதே ஆகும். அமெரிக்கா தனது சொந்த விதிமீறல்களை மறைக்கும் முயற்சியில், சர்வதேச சட்டங்களை மீறுவதாக தனது எதிராளிகள் மீது அடிக்கடி குற்றம் சுமத்துகிறது. அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் பெரும்பாலும் தார்மீகத்தை ஒரு வணிகப் பொருளாக அல்லது அரசியல் நாணயமாகவே நடத்துகிறார்கள்.

டொனால்ட் டிரம்பின் கீழ், குறிப்பாக அவரது இரண்டாவது பதவிக் காலத்தில் நிலைமை மேலும் மோசமடைந்தது. உலகை ஏமாற்றி தன்னை ஒரு சிறந்த சமாதானத் தூதராகக் காட்டிக்கொள்ள முடியும் என்று டிரம்ப் நம்புகிறார், ஆனால் அவரது "சமாதான முயற்சிகளை" பாராட்டுபவர்கள் அவரது அகந்தையை திருப்திப்படுத்துவதற்காகவே அதைச் செய்கிறார்கள்.

அவர்களில் பாகிஸ்தானின் இராணுவத் தளபதி ஆசிம் முனீரும் ஒருவர். அவர் கடந்த ஆண்டு வெள்ளை மாளிகைக்குச் சென்றிருந்தபோது, காசாவில் இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு டிரம்ப் நிர்வாகத்தின் உடந்தையாக இருந்ததை முற்றிலும் புறக்கணித்து, சமாதானத்துக்கான நோபல் பரிசுக்கு பாகிஸ்தான் ட்ரம்பைப் பரிந்துரைக்கும் என்று அறிவித்தார்.

ட்ரம்பின் கணக்கீட்டின்படி, இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவிற்கு எதிரான ஒரு அரணாகவும், அமெரிக்கா, ஜப்பான் ஆஸ்திரேலியா, ஆகிய நாடுகளுடனான நாற்கர பாதுகாப்பு ஏற்பாடான "குவாட்" (Quad) அமைப்பின் உறுப்பினராகவும் இருந்து தமக்கு சாதகம் இருப்பதாகத் தவறாகக் கருதிய அதன் போட்டி நாடான இந்தியாவை விட பாகிஸ்தான் முதலிடம் பிடிப்பதில் ஆச்சரியமில்லை.

அடுத்து, வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவரான மரியா கொரினா மச்சாடோ, நிக்கோலஸ் மதுரோவை பதவியிலிருந்து அகற்றுவதில் ட்ரம்ப் ஆற்றிய பங்கிற்காக நன்றியறிதலின் அடையாளமாக தனது நோபல் சமாதானப் பரிசுப் பதக்கத்தை டிரம்பிற்கு வழங்கினார்.

முனீர் மற்றும் மச்சாடோ போன்றோர் தன் மீது பொழியும் இத்தகைய பாராட்டுக்களை ட்ரம்ப் பெரிதும் ரசிக்கிறார். இது ஒரு தீவிரமான சுயநல ஆளுமைக் குறைபாட்டின் (narcissistic personality disorder) அறிகுறி என்பது அவரது வாக்காளர்களுக்குத் தெரிவதில்லை, அவர்களில் பெரும்பாலோர் எதையும் எளிதில் நம்பக்கூடியவர்களாகவே இருக்கிறார்கள்.

ட்ரம்ப் உலகிற்கு அமைதியைக் கொண்டு வர கடவுளால் அனுப்பப்பட்டவர் என்று கூட அவர்களின் தீவிரமான தொண்டர்கள் நம்புகிறார்கள்.

தங்களது ஜனாதிபதி அரசியல் விமர்சகர்களிடையே கேலிப் பொருளாக இருக்கிறார் என்பது அந்த ஏமாளித் தொண்டர்களுக்குத் தெரிவதில்லை.

ஆனால் அந்த நகைச்சுவைக்கு பின்னால் ஒரு பயங்கரம் ஒளிந்திருக்கிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை கலைப்பதற்கான அழைப்பு, ஈரானுக்கு எதிரான தற்போதைய சட்டவிரோதப் போர், காசா இனப்படுகொலையில் உடந்தையாக இருப்பது, வெனிசுலாவின் இறையாண்மை மீறல்கள் மற்றும் கம்யூனிச நாடான கியூபாவிற்கு அத்தியாவசிய எரிபொருள் கிடைப்பதைத் தடுக்கும் பொருளாதாரத் தடை - இந்த மறுப்பானது முன்னெப்போதும் இல்லாத அளவில் மரணங்களையும் இன்னல்களையும் ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்பின் கொள்கையானது "வாழு, வாழ விடு" என்பது அல்ல, மாறாக தார்மீகம் கோருவதற்கு மாறாக "வாழு, சாக விடு" என்பதா

> "உலகச் செல்வத்தில் சுமார் 50 சதவீதம் நம்மிடம் உள்ளது, ஆனால் உலக மக்கள் தொகையில் 6.3 சதவீதம் மட்டுமே நாம் இருக்கிறோம்... வரும் காலத்தில் நமது உண்மையான பணி என்னவென்றால், இந்த சமத்துவமற்ற நிலையைத் தக்க வைத்துக் கொள்ள அனுமதிக்கும் ஒரு உறவு முறையை உருவாக்குவதே ஆகும்..."

1950களில், தூதுவர் பயிற்சிப் பொறுப்பில் இருந்த அமெரிக்க இராஜதந்திரி ஜோர்ஜ் கென்னன், தூதுவர்களாக நியமிக்கப்படுபவர்களிடம் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் ஒரு முக்கிய விதியை நினைவில் கொள்ளுமாறு கூறினார். அவர் அவர்களிடம்: "உலகச் செல்வத்தில் சுமார் 50 சதவீதம் நம்மிடம் உள்ளது, ஆனால் உலக மக்கள் தொகையில் 6.3 சதவீதம் மட்டுமே நாம் இருக்கிறோம்... வரும் காலத்தில் நமது உண்மையான பணி என்னவென்றால், இந்த சமத்துவமற்ற நிலையைத் தக்க வைத்துக் கொள்ள அனுமதிக்கும் ஒரு உறவு முறையை உருவாக்குவதே ஆகும்..." என்றார்.

ட்ரம்பின் கீழ், கென்னனின் அந்த அறிவுரை தீவிரமான எல்லைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தார்மீகத்திற்கு ஏற்பட்ட மேலும் ஒரு அடியாக, வளங்களை நியாயமான முறையில் விநியோகிக்க வேண்டும் என்ற கோரிக்கை அமெரிக்காவில் அரசியல் துரோகமாகக் கருதப்படுகிறது. பில்லியனர்களின் கூட்டமைப்பிற்காக சோசலிசத்தையும் முற்போக்கான கருத்துக்களையும் இழிவுபடுத்துவது இந்தப் பணியின் ஒரு பகுதியாகும். இதற்கு ஒரு சிறந்த உதாரணம், ஜனநாயகக் கட்சியின் முற்போக்காளர்களிடமும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக அமெரிக்க இளைஞர்களிடையேயும் வளர்ந்து வரும் ஆதரவிலும் இல்லாத ஒரு கம்யூனிசத்தைக் காண்பதாகக் கூறி அவர் திடீரென நடத்திய தாக்குதலாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை ஒழிப்பது எளிதானதாக இருக்காது. நீதிமன்றத்தை ஆதரிக்கும் பிற மேற்கத்தைய நாடுகள், ஒரு அராஜக உலகத்திற்கான ரூபியோ மற்றும் ட்ரம்பின் பார்வையை ஆதரிக்க வாய்ப்பில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு எதிரான இந்த போருக்குப் பிறகு, டிரம்ப்-ரூபியோ கூட்டணி சர்வதேச நீதிமன்றத்தை (International Court Justice) ஒழிக்கவும் ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பைக் கலைக்கவும் அழைப்பு விடுக்குமா?

(முற்றும்)

(அமீன் இஸ்ஸதீன், டெய்லி மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூலை - 24 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம் - ஆடி 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : ஏகாதசி




**மேடம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**மிதுனம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சிந்தனை திறன் வெளிப்படும் நாள்.

**கடகம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**சிம்மம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். உத்தியோகத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

**துலாம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**விருச்சிகம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முடிவுகள் எடுப்பீர்கள்.

**கும்பம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கும். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

# யாழ் ராணி ரயில் சேவையின் 4ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை. 24

யாழ் ராணி ரயில் சேவையை ஆரம்பித்து நான்கு வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் யாழ் ராணி ரயிலில் நாளாந்தம் பயணம் செய்யும் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் நான்காவது ஆண்டு நிறைவு நிகழ்வு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நேற்று முன் தினம் மாலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், ரயில் திணைக்களத்தின் வடமார்க்கத்திற்கான மேற்பார்வையாளர் வி.எம்.என். நிரந்த விசுந்தர ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு கடமைகளுக்காக செல்லும் பல அரச உத்தியோகத்தர்களுக்கு பொருளாதார நிலைமையில் பிரயாணச் செலவை குறித்த ரயில் குறைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வீதிப் பெயர்ப்பலகை திரை நீக்கம்



யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபைக்கு முன் பக்கமாக உள்ள வீதிக்கு, புகழ்பெற்ற வயலின் வித்துவான் லட்சுமி நாராயணாவின் பெயர் சூட்டப்பட்டு, அதற்கான பெயர்ப்பலகை நேற்று நடைபெற்ற நிகழ்வில் திரைநீக்கம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும், இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல வயலின் வித்துவான் டாக்டர் எல்.சுப்பிரமணியம் உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டு பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர்.

இந்நிகழ்வில் இசை மற்றும் கலைத்துறையைச் சேர்ந்த பலரும், கலாசார ஆர்வலர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இசைத்துறைக்கு வயலின் வித்துவான் லட்சுமி நாராயணா ஆற்றிய சிறப்பான பங்களிப்பை நினைவுகூரும் வகையில் இந்த வீதிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# போசாக்கு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் விழிப்புணர்வு!

கிளிநொச்சி, ஜூலை. 24

போசாக்கு மாதத்தை முன்னிட்டு நஞ்சற்ற போசாக்கான உணவை உட்கொள்வோம் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி - கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் தர்மபுரம் மத்திய கல்லூரி முன்றலிருந்து ஆரம்பித்த விழிப்புணர்வு பேரணி தர்மபுரம் இலக்கம் 01 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வரை முன்னெடுக்கப்பட்டது.

நோய் உள்ள உணவுகளை உட்கொள்வதன் காரணமாக பலர் தொற்று நோய்களுக்கு உள்ளாகுவதும் நாள்பட்ட நோய் பாதிப்புகளை எதிர்கொண்டு வருவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை தடுத்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் குறித்த விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து நஞ்சற்ற உணவு போசாக்கு கண்காட்சியும் தர்மபுரம் இலக்கம் 01 பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது. தருமபுரம் மத்திய கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் தருமபுரம் பொலிஸார், பெற்றோர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (அ)

# கோயில் வயல் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை சுவீகரிப்பதற்கு முயற்சிகள்!

**காணி உரிமையாளர்கள் குற்றச்சாட்டு**

கிளிநொச்சி, ஜூலை. 25

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கோயில் வயல் பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளை துப்புரவு செய்வதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் தடுத்து வருவதுடன் அவற்றைச் சுவீகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவு-வெற்றிலைக்கேணி பிரதான வீதியில் மேற்கு புறத்தில் உள்ள குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தலைமுறை தலைமுறையாக பயிர்ச்செய்கை மேற்கொண்டு குறித்த பகுதியில் வசித்து வருகின்றனர்.

கடந்த 1991ஆம் ஆண்டு ஆனையிறவில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவை நோக்கி மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பகுதி மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து தமது வாழ்வாதாரங்களை கைவிட்டு சென்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைபெற்றதன் பின்னர் வெடிபொருள் ஆபத்தான பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டு வரையும் வெடிபொருள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தற்போது குறித்த காணிகளை துப்புரவு செய்து மக்கள் குடியேறுவதற்கு அல்லது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் தடை ஏற்படுத்தப்படுகின்றது.

தென்னை பயிர்ச்செய்கை காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்தும் நோக்கில் குறித்த காணி உரிமையாளர்களை அவர்களது காணிகளை துப்புரவு செய்யவிடாது தடுத்து வருவதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தும் வருகின்றது.

இந்நிலையில் தமது பூர்வீக காணிகளை பெற்றுத்தர உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இவ்வருடம் பதிவான டெங்கு நோயாளிகளில் 30 வீதமானோர் 19 வயதுக்கு உட்பட்டவர்கள்!

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தகவல்

கொழும்பு, ஜூலை. 24

இலங்கையில் இந்த ஆண்டு பதிவான டெங்கு நோயாளர்களில் 30 சதவீதம் பேர் 19 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் எனவும், மீதமுள்ள பெரும்பாலான டெங்கு நோயாளர்கள் 20 முதல் 65 வயதுக்குட்பட்டவர்களாக இருப்பதாகவும் சமூக சுகாதார நிபுணர் மருத்துவர் பிரஷீலா சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

டெங்கு காரணமான அதிக உயிரிழப்புகள் 65 வயதுக்கு மேற்பட்டவர்களிடையே பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நாட்டின் 12 மாவட்டங்களில் டெங்கு பரவல் தொடர்ந்து அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட் டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை நாடளாவிய ரீதியில் 78 ஆயிரத்து 125 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவற்றில், மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தில் அதிகபட்சமாக 16 ஆயிரத்து 798 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# மலேசியாவில் 7 இலங்கையர் கைது!

கோலாலம்பூர், ஜூலை. 24

சக இலங்கையர் ஒருவரைக் கட்டாயத் தொழிலாளியாகச் சுரண்டியதாகச் சந்தேகிக்கப்படும் இலங்கையர் ஒருவர் மலேசியக் குடிவரவுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாங்கூர், ஜெஞ்சாரோம் பகுதியில் உள்ள மூன்று இடங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின் போது, குறித்த சந்தேகநபர் கைதாகியுள்ளார்.

தனது முதலாளியால் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவதாகக் கருதப்படும் இலங்கையைச் சேர்ந்த பெண்ணொருவர் தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடு மற்றும் புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அத்திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலனாய்வுத் தகவல்கள், ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக நம்பப்படும் சந்தேக நபரை அடையாளம் காண உதவியுள்ளன.

சந்தேக நபரைத் தவிர, செல்லுபடியாகும் பயண ஆவணங்கள் அல்லது கடவுச்சீட்டுகள் இல்லாத காரணத்தினால் 21 முதல் 51 வயதிற்குட்பட்ட நான்கு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் அடங்கலாக மேலும் ஆறு இலங்கையர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மலேசிய ஊடக அறிக்கைகளின்படி, மனிதக் கடத்தல் எதிர்ப்பு மற்றும் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் பணமோசடி தடுப்புப் பிரிவு ஆகியவற்றின் புலனாய்வு மற்றும் பொதுமக்களின் முறைப்பாட்டைத் தொடர்ந்தே 38 வயதுடைய இச்சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையின் மூலம் கட்டாயத் தொழிலாளர் சுரண்டலுக்கு ஆளானவராக அடையாளம் காணப்பட்ட இலங்கைப் பெண் ஒருவர் மீட்கப்பட்டுள்ளதாக மலேசியக் குடிவரவுத் தலைமைப் பணிப்பாளர் டாதுக் ஜகாரியா ஷாபான் தெரிவித்துள்ளார்.

வேலை வாய்ப்புகள் மற்றும் பணி அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றப்பட்டு, சந்தேக நபருக்குச் சொந்தமான உணவகம் ஒன்றில் பணி புரிவதற்காகவே பாதிக்கப்பட்ட பெண் மலேசியாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 9 இந்திய மீனவர்கள் கைது!

மன்னார், ஜூலை. 24

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 9 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னாருக்கு வடக்கே அமைந்துள்ள இலங்கை கடற்பரப்பில் வைத்து குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது, இரணைதீவுக்கு தெற்கே உள்ள இலங்கை கடல் எல்லைக்குள் ஐம்பதிற்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில், ஒரு இந்திய மீன்பிடிப் படகு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன், அதிலிருந்த 9 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகையும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மீன்பிடி திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆபத்து ஏற்பட்ட பின்னரே விழித்துக்கொள்கிறது அரசு

## அஜித் மான்னப்பெரும குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை. 24

அரசாங்கம் எப்போதும் ஆபத்துகள் நிகழ்ந்து பெரும் சேதம் ஏற்பட்ட பின்னரே விழித்துக் கொள்ளும் பொறுப்பற்ற போக்கினைக் கொண்டுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும குற்றம் சாட்டினார்.

ஒருங்கிணைந்த கூட்டு எதிர்கட்சி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சேறு படிந்த உடலோடு இருக்கும் விவசாயி அரியணை ஏறத் தகுதியானவர் என்பதே எமது நாட்டின் உன்னதமான பண்பாடாகும். ஆனால், தற்போதைய மறுமலர்ச்சி அரசாங்கத்தின் முறையற்ற நிருவாகத்தால் அரியணை ஏறத் தகுதியான விவசாயி இன்று முறையற்ற மதுபான உற்பத்தியாளர்கள் என்று கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். கடந்த காலத்தில் நெல்லுக்கு நியாயமான விலை வழங்குவதாக வாக்குறுதியளித்த அநுர அரசாங்கம், ஆட்சிக்கு வந்த பின் விவசாயிகளை முற்றிலும் புறக்கணித்துள்ளது.

நாட்டில் உள்நாட்டுத் தேவைக்குக் குறைந்த அளவிலான அரிசியே போதுமானது என்ற போதிலும், அளவுக்கு அதிகமாக வெளிநாட்டு அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்து பொருளாதாரத்தில் பெரும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

சிறுபோகத்தில் பெருமளவு நெல் உற்பத்தி எதிர்பார்க்கப்படும் நிலையில், அரசாங்கம் அதில் மிகக் குறைந்த அளவையே கொள்முதல் செய்யத் திட்டமிட்டுள்ளது. இதனால் பெருமளவிலான நெல் தனியார் கிடங்குகளிலும் விவசாயிகளின் வீடுகளிலும் தேங்கியுள்ளதுடன், உள்நாட்டு நெல் கொள்முதலும் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

டித்வா புயல் எச்சரிக்கை, டெங்கு நோய் பரவல் மற்றும் விவசாய ஆராய்ச்சி நிலையங்களின் முன்னறிவிப்புகள் எதனையும் அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்காலத்தில் ஓமான் உரம் மற்றும் இந்தியக் கடன் உதவித் திட்டங்கள் மூலம் விவசாயத்துக்கு வளங்கள் சேர்க்கப்பட்டபோதிலும், தற்போதைய அரசாங்கம் எந்தவொரு திட்டமிடுதலும் இன்றிச் செயற்படுகின்றது-என்றார். (அ)

# கல்லாறு பகுதியில் 6.5 கிலோ கஞ்சாவுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்பு!



கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

கிளிநொச்சி, ஜூலை. 24

கிளிநொச்சி கல்லாறு பகுதியில் கத்தோலிக்க தேவாலயம் அருகே கைவிடப்பட்டிருந்த உரப்பையிலிருந்து சுமார் 6.5 கிலோகிராம் கேரள கஞ்சாவும், இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் இரவு சுமார் 11.45 மணியளவில் பொலிஸார் அப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, கத்தோலிக்க தேவாலயத்துக்கு அருகில் கைவிடப்பட்டிருந்த உரப்பை ஒன்றை மீட்ட பொலிஸார், அதனைச் சோதனையிட்டபோது மூன்று பொட்டலங்களாகப் பொதியிடப்பட்டிருந்த 6.49 கிலோகிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

அத்துடன், சம்பவ இடத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தப்பட்டிருந்த 2 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும், சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், தப்பிச் சென்ற சந்தேக நபர்களைக் கண்டறிந்து கைது செய்வதற்கான விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இரத்தப் பரிசோதனைக்கு அதிக கட்டணத்தை அறவிட்ட தனியார் வைத்தியசாலைக்கு ரூ.30 இலட்சம் அபராதம்!

## யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் இரத்தப் பரிசோதனைக்கு அதிக கட்டணம் அறவிடப்பட்ட குற்றத்திற்காக நீதிமன்றினால் 30 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்படும் சில மருத்துவப் பரிசோதனைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள் தொடர்பில் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், முழுமையான இரத்தப் பரிசோதனை ஒன்றுக்காக அறவிடக்கூடிய அதிகபட்ச கட்டணம் 400 ரூபாவாகும். எனினும், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில், குறித்த பரிசோதனைக்காக 550 ரூபாய் வீதம் அறவிடப்பட்டுள்ளமை பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பொன்றின் போது கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தம் மீதான குற்றச்சாட்டை வைத்தியசாலை நிர்வாகம் ஏற்றுக்கொண்டதையடுத்து, குறித்த நிறுவனத்துக்கு 3 மில்லியன் ரூபாய் நீதிமன்றினால் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், வைத்தியசாலை நிர்வாகத்தின் சொந்தச் செலவிலேயே பிரதான பத்திரிகைகளில் அறிவிப்பொன்றைப் பிரசுரிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்சக் கட்டணத்தை விடக் கூடுதலாகப் பணம் அறவிடப்படும் சந்தர்ப்பங்கள் தொடர்பில், அலுவலக நேரங்களில் 1977 என்ற அவசரத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முறைப்பாடளிக்க முடியும் என பாவனையாளர் அதிகார சபையினர் அறிவித்துள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளை பாதுகாக்க அதிகபட்ச நடவடிக்கை தேவை!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூலை. 24

அபிவிருத்தியடைந்து வரும் வடக்கு மற்றும் கிழக்குக் கரையோரப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு அதிகபட்ச நடவடிக்கைகளை எடுக்குமாறும், கடற்கரைப் பகுதிகளை அபிவிருத்தி செய்த பின்னர் அங்கு மேற்கொள்ளப்படும் சட்டவிரோதக் நிர்மாணங்களால் கடற்கரைக்கு பெரும் சேதம் ஏற்படுவதால், அதனைத் தடுப்பதற்கு அதிகபட்ச சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அந்த நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக செயற்பாட்டுக் குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தினார்.

சுற்றாடல் அமைச்சுக்கு 2026 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

"வளமான நாடு - அழகான வாழ்க்கை, நிலைபேறான உயிர்சார் உலகம் - என்னும் பசுமையான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளின் கீழ், சுற்றாடல் அமைச்சினால் 19 ஆயிரத்து 719 மில்லியன் ரூபா வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 2027ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது

தொடர்ந்து 2026ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களின் முன்னேற்றம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஒலுவில் கடலரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நிபுணர் குழுவொன்றை நியமித்து, விரைவாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இதன்போது அறிவுறுத்தினார்.

இலங்கையில் மனித-யானை மோதலைக் குறைப்பதற்காக 2026 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி இதன்போது விசேடமாக கேட்டறிந்ததுடன், மந்தகதியில் இடம்பெறும் இத்திட்டங்கள் மனித உயிர்களுக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன எனவும், தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தும் திட்டங்கள் தாமதமாவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

எனவே, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரம் குறித்து உணர்வுபூர்வமாகச் சிந்தித்து, இத்திட்டங்களை உரிய காலத்திற்குள் நிறைவு செய்வதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இவ்வருடத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளை இவ்வருடத்திற்குள்ளேயே பயன்படுத்தி உரிய நிர்மாணப் பணிகளை மேற்காள்ளுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இலங்கைக்காகத் தரமான கார்பன் உமிழ்வுக் கொள்கையொன்றை தயாரிப்பதற்குச் சுற்றாடல் அமைச்சு தற்போது நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதன் மூலம் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்திக் கொள்ள முடியும் என்றும் சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் தம்மிக பட்டபெந்தி இதன்போது குறிப்பிட்டார். (அ)

# நாவிதன்வெளி வரவேற்பு வாயிலில் "உழவர் சிலை" அமைக்க தீர்மானம்!

அம்பாறை, ஜூலை. 24

நாவிதன்வெளி பிரதேச சபையின் 13ஆவது மாதாந்த அமர்வின்போது நாவிதன்வெளி வரவேற்பு நுழைவாயிலில் "உழவர் சிலை" அமைக்க ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இறைவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் உப தவிசாளர் உட்பட சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில், நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளராகப் பணியாற்றி மறைந்த ஏ.கே. அப்துல் சமட்டுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவர் குறித்துத் கருத்துத் தெரிவித்த தவிசாளர் ரூபசாந்தன், "மறைந்த ஏ.கே.அப்துல் சமட் இனம், மதம் கடந்து மக்கள் பணியாற்றி அனைவரது அன்பையும் பெற்ற ஒரு சிறந்த தலைவராவார்" எனத் தெரிவித்து, அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதாகக் குறிப்பிட்டார்.

மேலும், இதுவரை காலமும் பிரதேச சபையின் பதில் செயலாளராகக் கடமையாற்றி வந்த பி.சதீஸ்கரன் நிரந்தரச் செயலாளராக நியமனம் பெற்றமைக்கு தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

நாவிதன்வெளி பிரதேசம் விவசாயத்தைச் சார்ந்த பகுதி என்பதால், கல்முனை - நாவிதன்வெளி பிரதான வீதியிலுள்ள வரவேற்பு நுழைவாயிலில் "உழவர் சிலை" ஒன்று நிறுவப்பட வேண்டும் எனப் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கமலேஸ்வரன் பிரேரணை முன்வைத்தார். இப்பிரேரணை சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வழக்குகளை சம்மாந்துறை நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு மாற்றுவது தொடர்பாகச் சபையின் அனுமதி கோரப்பட்டது. இருப்பினும், நாவிதன்வெளி பிரதேசம் கல்முனை நகரத்திற்கு அருகில் அமைந்திருப்பதாலும், போக்குவரத்து வசதிகளைக் கருத்தில் கொண்டும், சவளக்கடை மற்றும் மத்திய முகாம் பொலிஸ் நிலைய வழக்குகளைக் கல்முனை நீதிமன்ற நியாயாதிக்கத்திலேயே தொடர்வது எனத் தீர்மானிக்கப்பட்டு, சம்மாந்துறை நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (அ)

# ஒன்லைன் பொருள் கொள்வனவை இலக்கு வைத்து இணைய மோசடி!

கொழும்பு, ஜூலை. 24

நிகழ்நிலை மூலமாகப் பொருள்களை வீடுகளுக்கே கொள்வனவு செய்வோரை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் இணையவழி மோசடிகள் குறித்துப் பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வாடிக்கையாளர்கள் நிகழ்நிலை ஊடாக கொள்வனவுக்காக பதிவு செய்யாத பொருள்கள் விநியோகிக்கிக்கப்படும் போது மூன்றாம் தரப்பினரால் ஏற்படுத்தப்படும், தொலைபேசி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு அறிவுருத்தியுள்ளது.

இவ்வாறான மோசடிகளின் போது குறித்த பதிவு செய்யப்படாத பொருளை இரத்து செய்ய வேண்டும் எனக் கூறி குறுஞ்செய்தி அல்லது வாட்ஸ்அப் செயலி ஊடாக இணைய இணைப்பு ஒன்று அனுப்பிவைக்கப்படுவதாகவும், குறித்த இணைப்பை அனுகுவதன் மூலம் இரகசியக் குறியீட்டைப் பெற்று, தரவுகளை கையாளக் கூடிய செயலிக் கோப்புகளைப் மோசடி காரர்கள் பதிவிறக்கம் செய்ய வைப்பதன் மூலம் தொலைபேசி, கணினியில் உள்ள தரவுகளை பெற்றுக் கொள்கின்றனர்.

அத்தோடு, போலியான விநியோக முகவர்களும் நேரடியாக வந்து, பொருள் கொள்வனவுக்கான பதிவை இரத்து செய்வதாகக் கூறி இணைப்பை அணுகுமாறு தெரிவித்து, வங்கிக் கணக்கு விவரங்கள் மற்றும் தனிப்பட்ட தரவுகள் திருடப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

ஆகையால், அறிமுகமில்லாத நபர்கள் அனுப்பும் இணைப்புகளை அனுகுவதையோ, ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொல் மற்றும் பின் எண்களைப் பகிர்வதையோ தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# 76 இலட்சம் ரூபாய் பெறுமதி கொண்ட வாழ்வாதார உபகரணங்கள் வழங்கல்



மட்டக்களப்பு, ஜூலை. 24

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 76 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளர் மே.வினோராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதே சபை உறுப்பினர்கள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 375 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இடியப்பம் செய்யும் உபரணங்கள், தேங்காய் துருவும் இயந்திரம், அரிசி அரைக்கும் இயந்திரம், உள்ளிட்ட பல்வேறு வாழ்வாதரப் பொருள்கள் வழங்கப்பட்டன.

# செயற்கை நுண்ணறிவு மென்பொருள் கிழக்கு மாகாணத்தில் அங்குரார்ப்பணம்

திருமலை, ஜூலை. 24

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாகாண அரச நிறுவனங்களில் பயன்படுத்துவதற்கும், அலுவலக நடைமுறைகளை எளிதாக்குவதற்கும் செயற்கை நுண்ணறிவுடன் உருவாக்கப்பட்ட மென்பொருளை அறிமுகப்படுத்தும் தொடக்க விழா நேற்று முன் தினம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர மற்றும் பிரதம செயலாளர் கே.குணநாதன் ஆகியோரின் பங்கேற்புடன் கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

குறித்த மென்பொருளின் மூலமாக வினைத்திறனான அரச சேவையை முன்னெடுப்பதற்கும் அலுவலக வேலைகளை இலகுபடுத்தவும் சிறந்த உத்தியாக இது காணப்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது மாகாண பிரதம செயலாளர் கே.குணநாதன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்-

தற்போதைய நடப்பு அரசசாங்கத்தின் புதிய உத்தியோகத்தர்களுக்கான கொள்கையாக டிஜிற்றல் மயமாக்கமம் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது இதன் அடிப்படையில் கிழக்கு மாகாணமும் இதில் இதன் மூலமாக முன்னேற்றமடைய வேண்டி உள்ள தாகவும் தெரிவித்துள்ளார். (அ)



# அதிக வெப்பம், வரட்சியால் வற்றிப்போயுள்ள குளங்கள்!

## மட்டக்களப்பில் நீர்த் தாங்கிகள் மூலம் தினமும் 25000 லீற்றர் குடிதண்ணீர் வழங்குவதற்கு ஏற்பாடு

மட்டக்களப்பு, ஜூலை. 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது அதிக உஷ்ணமான காலநில நிலவி வருகின்றது. இதனால் கிராமியக் குளங்கள் வற்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்திற்குட்பட்ட பெரியபோரதீவு பெரியகுளம், கோவில்போரதீவுக்குளம், பொறுகாமம் குளம், வெல்லாவெளிக்குளம், உள்ளிட்ட பல பகுதிகளிலும் அமைந்துள்ள கிராமியக் குளங்கள் முற்றாக வற்றியுள்ளன.

இந்நிலையில் கால்நடைகளும், நீர் தேடிச் செல்வதோடு, வற்றிய குளங்களில் அப்பகுதி மக்கள் மீன் பிடிப்பதையும், பறவைகள் இரைதேடி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.



இது இவ்வாறு இருக்க கிராமங்களிலுள்ள கிணறுகளில் நீர் வற்றியுள்ளதனால் தாம் மக்களுக்கு நீர்த்தாங்கிகள் மூலம் நேற்று முன் தினம் புதன்கிழமையிலிருந்து நாளாந்தம் சுமார் 250000 லீற்றர் குடிதண்ணீர் வழங்க திட்டமிட்டுள்ளதாக போரதீவுப் பற்றுப் பிரதேச சபையின் தவிசாளர் வி.மதிமேனன் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 1983 கலவரத்துக்கு...

எலும்புக்கூட்டுக்கும் 83 கலவரத்துக்கு உதவி ஒத்தாசை வழங்கி அனுமதியளித்த அரசத் தலைவர்கள் பொறுப்புக் கூறவேண்டும்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து இலங்கையின் சினிமாத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்தது. தென்னிந்திய சினிமாத்துறையின் ஒத்துழைப்பு இலங்கைக்கு முழுமையாக கிடைக்காமல் போனது. அதன் தாக்கம் இன்று வரை தொடர்கிறது.

ஐக்கிய தேசிய கட்சியே இந்த நாட்டில் இனக் கலவரத்தை தோற்றுவித்து 30 ஆண்டுகால பயங்கரவாத யுத்தத்தை உருவாக்கியது. அதற்கு அந்த கட்சியின் சகல உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும்-என்றார். (அ)

### மழை அங்கியை...

ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவற்றில் 9 எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

மூன்று எலும்புக் குவியல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், ஆணிகளும் சிமெந்து தட்டு ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்தவகையில், இதுவரை 478 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 464 எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ)

### கொழும்பு துறைமுக...

அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்துக்கு அருகில் சோதனைக்குட்படுத்தப்பட்ட வாகனம் ஒன்றிலிருந்து கைத்துப்பாக்கி மற்றும் தகவல் தொடர்பு கருவி ஒன்றை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்த மோதலின்போது காயமடைந்த மற்றொரு சீன நாட்டவரையும் எதிர்க் குழுவினர் அங்கிருந்து கடத்திச் சென்றுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக கொழும்பு துறைமுக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### நீதித்துறையில் அநுர...

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்காகப் பிரதான எதிர்க் கட்சிகள் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று விசேட கூட்டம் ஒன்றை நடத்தின.

இதன்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனநாயகம் மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்காகவே எதிரணிகள் அனைத்தும் இன்று ஒன்றுபட்டுள்ளன. இதுவே எமது பிரதான பொது நோக்கமாகும். இந்த அடிப்படை விடயங்களுக்காக நாமனைவரும் இணைந்து பயணிப்போம்" என்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட எதிரணியைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதில் பங்கேற்றனர். (அ)

### கோட்டாபயவின்...

மேலதிக பரிசீலனைக்காக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைவாக, தன்னை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைப்பதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, மனுதாரர் கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, பதிலுரைகளைச் சமர்ப்பித்தார்.

அந்தவகையில், மேலதிக சமர்ப்பணங்களை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்குமாறு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

### கடந்த ஆறு மாத...

வெளியிட்டார்.

அமைச்சரின் தகவலின்படி, இந்த ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலான தரவுகளின் அடிப்படையில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட 4,421 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் மேல் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத் தடுப்புப் பிரிவின் கீழ் இயங்கும் 47 பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பணியகங்களுடன் இணைந்து விசாரணைகளை விரைவுபடுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டிய நிலையைத் தவிர்க்கும் வகையில், பாதுகாப்பான சூழலில் காணொளி மூலம் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடைமுறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 9 மாகாணங்களிலும் வீடியோ சாட்சியப் பதிவு அலகுகளை நிறுவுவது தொடர்பில் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் பதிவான முக்கிய முறைப்பாடுகள்:

சிறுவர்கள் மீதான கொடூரம் - 1100
பாலியல் துன்புறுத்தல் - 213
இணையவழி வன்முறைகள் - 112
சிறுவர்களைப் பாலியல் சுரண்டலுக்குப் பயன்படுத்துதல் - 100
சிறுவர்களைக் சட்டவிரோதமாகக் கடத்துதல் - 99
சிறுவர் உழைப்பு - 82
கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் - 60
இளம் பருவக் கர்ப்பங்கள் - 40
தற்கொலை முயற்சிகள் - 13
சிறுவர் திருமணங்கள் - 5

சிறுவர் பாதுகாப்பு பொறிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதோடு, குற்றவாளிகளுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தை இந்தப் புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

# எதிர்க்கட்சி முற்றிலும் அகற்றப்படும் என அரசு கூறுவது ஜனநாயக விரோத செயல்!

## நாமல் ராஜபக்ஷ எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை. 24

எதிர்க்கட்சியை அகற்றிவிடலாம் என அரசாங்கம் நினைத்தால் அது பெரும் தவறான எண்ணமாகும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பிரதி அமைச்சர் ஒருவர் எதிர்க்கட்சியை முற்றிலும் அகற்றிவிட்டதாகவும், மீதமுள்ளவற்றையும் விரைவில் அகற்றிவிடுவோம் என்றும் கூறுவது ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கூற்று என அவர் சாடினார்.

அத்துடன் நீதித்துறையின் நியமனங்களை அல்லது நீதியரசர்களின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதன் மூலம் அரசாங்கம் தனது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முற்படுவ



தாகவும், அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்கள் மூலம் எதிர்க்கட்சியை ஒடுக்க முடியாது என்றும் நாமல் சுட்டிக்காட்டினார். (அ)

### பாராளுமன்றில்...

நேற்றுடன் 43 ஆண்டுகள் கடந்துவிட்டன.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், 1983 ஜூலையில் சிந்தப்பட்ட தமிழர்களின் இரத்தமும், எரிக்கப்பட்ட சாம்பலின் சாட்சியங்களும் இன்றும் தமிழ் நெஞ்சங்களில் ஆறாத வடுவாகவே நீடிக்கின்றன என தமிழ் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். (அ)

### முட்டாள் தனமாக...

நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது நிலையியல் கட்டளைகள் குறித்த கேள்வியை எழுப்ப இருந்த சந்தர்ப்பத்தில் அர்ச்சுனா இராமநாதன் சபாநாயகரை நோக்கி, வினாவை கேட்பதற்கு முன்னதாக அதற்கு தடை ஏற்படுத்தியுள்ளீர்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இதற்கு பதில் வழங்கிய சபாநாயகர், முட்டாள் தனமாக பாராளுமன்றில் நடந்துகொள்ள வேண்டாம், பாராளுமன்றை ஒரு விளையாட்டுத்தனமாக மாற்ற முயற்சிக்கவேண்டாம் என எச்சரித்தார்.

இதன்போது சபாநாயகரின் கருத்துக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

நிலையியல் கட்டளைகளின்படி எந்த ஒரு உறுப்பினருக்கும் மோசமான முறையில் தகாத வார்த்தைகளால் குற்றம் சாட்ட முடியாது. முட்டாள் தனமாக உரையாற்றவேண்டாம் என நீங்கள் கூறிய விடயம் பொருத்தமற்றது. சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்துள்ள நீங்கள் நிலையியல் கட்டளைக்கு ஏற்ப செயற்படுங்கள். கேள்விகளை எழுப்புவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குங்கள் என சஜித் பிரேமதாஸ கூறினார்.

இந்த விவகாரத்தால் பாராளுமன்றத்தில் சில நிமிடங்கள் பதற்றமான சூழ்நிலை நிலவியதுடன், அமர்வு பரபரப்பாக அமைந்தது. (அ)

### எதிர்பார்த்ததைவிட...

உச்சகட்ட நிலையை அடையக்கூடும் எனப் சுற்றாடல் அமைச்சர் தம்மிக பட்டபெந்தி எச்சரிக்கை விடுத்துள்ளார். அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் நாடளாவிய ரீதியில் மிகக் கடுமையான வறட்சியான வானிலை நிலவும். ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் வறட்சியைத் தொடர்ந்து, கடும் மழை பெய்யும். இதனால் நாட்டின் பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அபாயங்கள் உருவாகலாம்.

எல் நினோ என்பது இலங்கைக்கு மட்டும் உரியது அல்லாமல், ஒரு உலகளாவிய காலநிலை சவாலாகும். இதன் தாக்கங்களை எதிர்கொள்ள அனைத்து அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஊடக அமைப்புகளுடன் இணைந்து விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

விவசாயம், குடிதண்ணீர் விநியோகம், மின்சாரம், வேலைவாய்ப்பு மற்றும் மனித வாழ்வாதாரம் ஆகியவற்றில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைக்க அரசாங்கம் ஏற்கனவே குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை வகுத்து வருகிறது.

நாட்டில் ஏற்படவுள்ள கடும் வறட்சியைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் அனைவரும் மின்சாரம் மற்றும் குடிதண்ணீரை மிகவும் பொறுப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தீவிர வெப்பம் மற்றும் வறட்சியினால் விவசாயம், மீன்பிடி போன்ற உணர்திறன் வாய்ந்த துறைகளில் வேலை இழப்புகள் மற்றும் வாழ்வாதாரப் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதால், பொதுமக்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (அ)

### நீர்கொழும்பு சிறை...

விசாரணை அதிகாரிகள் 28 உடற்கூறாய்வு அறிக்கைகளையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

கடந்த ஜூலை 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட மோதல்களில் 10 சிறைச்சாலை அதிகாரிகளும் 21 சிறைக்கைதிகளும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

### கொழும்பில் இருந்து...

கொழும்பு கோட்டையிலிருந்து தலைமன்னார் துறை முகத்திற்கும், இலக்கம் 5004 கொண்ட ரயில் தலைமன் னார் துறை முகத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கும் இயங்கும்.

இந்த ரயில் அதிகாலை 3.50 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்டு காலை 10.44 மணிக்கு தலைமன்னார் துறைமுகத்தைச் சென்றடையும். மறுமார்க்கமாக, தலைமன்னார் துறைமுகத்திலிருந்து அதிகாலை 4.10 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பிக்கும்.

இந்தச் சேவை கம்பஹா, பொல்கஹவெல, குருநாகல், கல்கமுவ, அனுராதபுரம், மடு வீதி, மன்னார், பேசாலை உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்கள் ஊடாகச் செயல் படும்.

அநுராதபுரம் புதிய நகர ரயில் நிலையத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் வரை இந்த ரயில் அங்கு நிறுத்தப்படாது என இலங்கை ரயில்வே தெரிவித்துள்ளது.

இப்புதிய சேவையில் ஆசன முன்பதிவு வசதிகளுடன் கூடிய இரண்டு குளிரூட்டப்பட்ட முதல் வகுப்புப் பெட்டிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. பயணிகள் ரயில்வே முன்பதிவு முறைமை மூலமாகவோ ரயில் நிலையங்களுக்குச் சென்றோ ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும்.

இந்தப் புதிய ரயில் சேவை தொடங்குவது குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்துமாறு இலங்கை ரயில்வே ஊடகங்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

## யாழ். பொது நூலகத்துக்குச் சென்றார் புத்த சாசன அமைச்சர் சுனில் செனவி

யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ்ப்பாணத்திற்கு நேற்று வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்ட புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி யாழ். பொது நூலகத்துக்கு சென்றார்.

அதன்போது , வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ் . மாநகர சபையின் பிரதி முதல்வர், யாழ்.மாநகர ஆணையாளர் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர். (அ)



## கறுப்பு ஜூலை படுகொலையில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு பொது நினைவுச்சின்னம்!

### ஐங்கரநேசன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை. 24

1983 ஜூலை இனக்கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துத் தமிழ் மக்களையும் நினைவுகூரும் வகையில் பொது நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்படல் வேண்டும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

1983 கறுப்பு ஜூலை இனக்கலவரத்தின் நினைவை முன்னிட்டு பொ.ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

1983 ஜூலையில் நிகழ்ந்தது இரு சமூகங்களுக்கிடையே வெடித்த ஒரு சாதாரண கலவரம் அல்ல.

அது, அப்போதைய பேரினவாத அரசாங்கத்தின் முழுமையான ஆசீர்வாதத்தோடும், அனுசரணையோடும் அரச இயந்திரங்களையும், வாக்காளர் பட்டியல்களையும் பயன்படுத்தித் தமிழ் மக்களை இனங்கண்டு மிகத் துல்லியமாக நடாத்தப்பட்ட திட்டமிடப்பட்ட ஓர் இனப்படுகொலை ஆகும்.

கொழும்பில் ஆரம்பித்துத் தென் இலங்கையின் பிறபகுதிகளுக்கும் மலையகத்துக்கும் பரவிய பேரினவாத வெறியாட்டத்தில் வெலிக்கடைச் சிறையில் கைதிகளாக இருந்த 53 பேர் உட்பட 3000 தமிழர்கள் வரையில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஜூலை இனக்கலவரம் தமிழ் மக்களின் உயிர்களை மாத்திரம் பலியெடுக்கவில்லை.

அவர்களின் வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன.

ஈழத்தமிழர்கள் பொருளாதார ரீதியாகத் தற்சார்பு அடைந்து விடக்கூடாது என்பதற்காகத் தமிழர்களின் பல தசாப்தகாலப் பொருளாதாரக் கட்டமைப்புகள் ஒரே வாரத்துக்குள் முற்றாகச் சிதைக்கப்பட்டன.

தமிழ் மக்கள் வெறும் கையினர்களாக அங்கிருந்து கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

இந்த வரலாற்றுத் துயரங்களை மறப்போம் மன்னிப்போம் என்று கூறிவிட்டு நாம் கடந்து செல்ல முடியாது.

எமது நெஞ்சில் ஆறாத வடுவாக இருக்கும் இந்த வரலாற்றுப் பேரவலத்தின் பின்னணியையும், அதன் மூலம் தமிழ் இனம் கற்றுக்கொண்ட அரசியல் பாடங்களையும் எமது அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துவது முதன்மையான தேசியக் கடமையாகும்.

இந்த வரலாற்றுக் கடத்துகைக்கு நினைவேந்தல்களும், நினைவுச் சின்னங்களும் அவசியமானவை ஆகும்.

எனவே, கறுப்பு ஜூலையில் எமது இனம் இழந்த உயிர்களின் சாட்சியாகவும், எமது தேசிய விடுதலைப் பயணத்தின் வழிகாட்டியாகவும் பொருத்தமானதொரு இடத்தில் 1983 கறுப்பு ஜூலை நினைவுச்சின்னம் நிறுவப்படல் வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# அனுமான் சிலையைக் காட்டி பணம் சுருட்ட முயன்ற கும்பல்!

### பிரதி அமைச்சரின் பெயரையும் பயன்படுத்தி மோசடி

கொழும்பு, ஜூலை. 24

இலங்கையிலும் இந்தியாவிலும் அனுமான் சிலைகளை வழிபாட்டுப் பொருள்களாகப் போற்றும் மக்களின் நம்பிக்கையைப் பயன்படுத்தி, கோடிக்கணக்கில் பணமோசடியில் ஈடுபட்டு வந்த கும்பலின் பின்னணி அம்பலமாகியுள்ளது.

போர்க் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்து வழிபடப்பட்டதாகக் கூறப்படும், தங்க முலாம் பூசப்பட்ட தடியுடன் கூடிய அனுமான் சிலை ஒன்று, கடந்த 2016 ஆம் ஆண்டு ஜா-எல மெல்வத்த பகுதிக்கு இரகசியமாகக் கொண்டு வரப்பட்டு புதைக்கப்பட்டதாக இந்த மோசடிக் கும்பல் பிரசாரம் செய்துள்ளது.

நிலத்தில் புதைக்கப்பட்டுள்ள அந்தச் சிலையை, இந்தியாவில் உள்ள ஒரு பூசாரிக்கு ரூபாய் 2,500 கோடிக்கு விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளதாக அவர்கள் இணையவழியில் தகவல்களைப் பரப்பியுள்ளனர்.

மேலும், இந்தச் சட்டவிரோத வர்த்தகத்துக்குப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகலவின் முழுமையான ஆதரவு இருப்பதாகக் கூறி மக்களை நம்ப வைக்க முயன்றுள்ளனர்.

புதைக்கப்பட்டுள்ள சிலையைத் தோண்டி எடுத்து இந்தியாவிற்கு அனுப்பும் வரை தேவைப்படும் இடைக்காலச் செலவுகளுக்காக ரூபாய் 2 கோடி தேவைப்படுவதாகக் கூறி, செல்வந்த தொழிலதிபர்களின் வாட்ஸ்அப் எண்களுக்கு இவர்கள் குறுஞ்செய்திகளை அனுப்பியுள்ளனர்.

“இது ஒரு சிறந்த வணிகம், இதில் முதலீடு செய்தால் உடனடியாகப் பெருந்தொகை இலாபமாகக் கிடைக்கும்” எனக் கூறி பலரிடம் பணத்தைப் பறிக்க இந்த கும்பல் திட்டம் தீட்டியுள்ளது.

இத்தகைய பின்னணியில் தனது பெயரைப் பயன்படுத்தி நடைபெறும் இந்த மோசடி குறித்துத் தகவலறிந்த பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, காவல்துறை தலைமை அதிகாரி மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் உடனடியாக முறைப்பாடு அளித்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை முடுக்கிவிட்ட பொலிஸார், கொழும்பு பகுதியில் மற்றொரு நபரிடம் இந்த அனுமான் சிலை குறித்துப் பேசிப் பணத்தைப் பறிக்க முயன்றபோது, பிரதான சந்தேக நபரைச் சம்பவ இடத்திலேயே கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரின் கையடக்கத்தொலைபேசியைச் சோதனையிட்டதில், வாட்ஸ்அப் மூலமாகப் பலருக்கு இந்த மோசடி தொடர்பான காணொளிகள் மற்றும் புகைப்படங்களை அனுப்பியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், மேலதிக விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் சிலர் தரம்குறைந்த, நாகரிகமற்ற நடத்தை!

### பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை. 24

பாராளுமன்றத்தில் சில உறுப்பினர்களின் தரக்குறைவான மற்றும் நாகரிகமற்ற நடத்தை சபையின் கண்ணியத்தை பாதிப்பதாக சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அனைத்து உறுப்பினர்களும் பாராளுமன்ற ஒழுக்கத்தைப் பேணுவதற்காக பொதுவான உடன்பாட்டை எட்ட வேண்டும் என்றும், சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எனது அரசியல் அனுபவத்தில் இதுபோன்ற கீழ்த்தரமான நடத்தை இதுவரை காணப்படவில்லை. சம்பவத்தின் முழு விவரங்கள் ஒலிப்பதிவுகளிலோ காணொளிகளிலோ இடம்பெறாமல் போயிருக்கலாம் என்றாலும், சபையில் இருந்த அனைவரும் அதற்கு சாட்சிகள்.

குறிப்பிட்ட உறுப்பினரின் நடத்தை குறித்து ஏற்கனவே கட்சித் தலைவர்களும் சிரேஷ்ட அமைச்சர்களும் கவலை வெளியிட்டுள்ளனர். அந்த உறுப்பினருக்கு அருகில் அமர முடியாது என இருக்கை மாற்றக் கோரிக் கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களைக் கூட சுமுகமாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏதோவொரு மனநோய் நிலைமை இருப்பதால் அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டால் சரியாகிவிடும் என்று நாம் பொறுத்துக்கொண்டிருக்கிறோம்-என்றார். (அ)

# சர்வதேச ரீதியில் இலங்கையின் கடவுச்சீட்டுத் தரவரிசை உயர்வு

கொழும்பு, ஜூலை. 24

சர்வதேச அளவில் இலங்கை கடவுச்சீட்டின் வலுவான நிலையை வெளிப்படுத்தும் வகையில், உலகின் சக்திவாய்ந்த கடவுச்சீட்டுக்கான சமீபத்திய ஹென்லி குறியீட்டுப் பட்டியலில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

சமீபத்திய தரவரிசையின்படி, இலங்கை உலகளவில் 94ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இலங்கைக் கடவுச்சீட்டைக் கொண்டுள்ளவர்கள் முன்கூட்டிய விசா அனுமதியின்றி அல்லது வருகையின் போது விசா பெறும் வசதியுடன் உலகளாவிய ரீதியில் 39 நாடுகளுக்குப் பயணிக்க முடியும்.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த முன்னேற்றம் இலங்கையின் சர்வதேச நடமாடும் உரிமையின் சீரான மீட்சியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

குறியீட்டில் உள்ள கீழ்மட்ட நாடுகளைக் காட்டிலும் இலங்கை முன்னிலையில் இருப்பதுடன், லிபியா நாட்டுடன் இணைந்து 94ஆவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளது.

முன்கூட்டிய விசா தேவையின்றி 227 இலக்குகளுக்கான அணுகலை அடிப்படையாகக் கொண்டு, உலகின் முன்னணி கடவுச்சீட்டு குறியீடுகளில் ஒன்றாக விளங்கும் ஹென்லி நிறுவனம் 199 கடவுச்சீட்டுகளை இந்தத் தரவரிசையில் மதிப்பிட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தற்போது 13 இடங்கள் முன்னேற்றம் கண்டுள்ளது. அதுமட்டுமின்றி, உலகளாவிய பயணங்களை முடக்கிய பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலப்பகுதிக்குப் பின்னர், இலங்கை பதிவு செய்துள்ள மிக வலுவான நிலைப்பாடாகவும் இது பார்க்கப்படுகிறது.

சுற்றுலா, வர்த்தகம், வேலைவாய்ப்பு மற்றும் தூதரக உறவுகள் ஆகியவற்றில் இலங்கையின் சர்வதேச இணைப்பு மற்றும் இராஜதந்திர உறவுகள் வலுவடைந்து வருவதற்கான சாதகமான அறிகுறியாகவே இந்தத் தரவரிசைப் புள்ளிவிவரங்கள் பார்க்கப்படுகின்றன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.07.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org